**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். STC 255/2024**
**வழக்கு சாட்சி. ம.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | கருப்பையா | **ஜாதி:** | |
| **தந்தை பெயர்:** | அழகுசேர்வை | **தொழில்:** | விவசாயம் |
| **கிராமம்:** | சுப்பிரமணியபுரம் | **சமயம்:** | |
| **தாலுக்கா:** | அறந்தாங்கி | **வயது :** | 59/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of oaths Act, 1969 (Act 44 of 1969)**

**21.07.2025**

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கின் புகர்தாரராவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தினை சத்தியபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதனை ஏற்றுக்கொண்டு எனது தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்களை **ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6** வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன். எனது தரப்பு சாட்சியத்தினை ஏற்று எதிரிக்கு தக்க தண்டனையும், எனக்கு இழப்பீடும் கிடைக்க உத்தரவிடுமாறு வேண்டுகிறேன்.

1) 06.08.2024 தேதியிட்டு எதிரி எனக்கு கொடுத்த பாரத ஸ்டேட் வங்கி, அரசர்குளம் கிளையில் **காசோலை (காசோலை எண்.894582) அசல் ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2) 06.08.2024 தேதியில் புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட், சுப்பிரமணியபுரம் கிளையில் காசோலையினை வசூலுக்காக தாக்கல் செய்ததற்குறிய **செலுத்துச் சீட்டு அசல் ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3) 19.08.2024 தேதியிட்ட புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட், சுப்பிரமணியபுரம் கிளையின் **ரிட்டன் மெமோ (Return Memo) அசல் ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4) 29.08.2024 தேதியிட்ட எனது தரப்பில் எதிரிக்கு அனுப்பப்பட்ட **வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5) 29.08.2024 தேதியிட்ட **வழக்கறிஞர் அறிவிப்பினை பதிவஞ்சலில் அனுப்பியதற்குரிய அஞ்சலக ரசீது அசல் ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
6) 30.08.2024 ஆம் தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டதற்குரிய **அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆவணங்களை ஏற்று எனக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்க வேண்டுகிறேன்.